Language Code : **17**

इस पुस्तिका में **20** मुद्रित पृष्ठ हैं।
This booklet contains **20** Printed pages.

# SED-24-II

**प्रश्न-पत्र-II / PAPER-II**
**तमिल भाषा परिशिष्ट**
**Tamil Language Supplement**
**भाग-IV & V / PART-IV & V**

मुख्य परीक्षा पुस्तिका संख्या / Main Test Booklet No.

मुख्य परीक्षा पुस्तिका कोड / Main Test Booklet Code

**D**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें। / FOR INSTRUCTIONS IN TAMIL SEE PAGE 2 OF THIS BOOKLET.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो **या** तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं**।
2. परीक्षार्थी भाग I एवं भाग II **या** III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं। भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं OMR उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **D**। यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, OMR उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है। अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग-IV : भाषा-I (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा-II (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं। इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं। **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए। जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा-I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें। अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें। उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है।

## INSTRUCTIONS FOR CANDIDATES

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Part I and Part II **OR** III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page/ marking responses in the OMR Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **D**. Make sure that the CODE printed on **Side-2** of the OMR Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part-IV : Language-I (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language-II (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part-V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ____________________
Name of the Candidate (in Capitals) :
अनुक्रमांक : (अंकों में) / Roll Number : in figures ____________________
: शब्दों में / in words ____________________
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ____________________
Centre of Examination (in Capitals) :
परीक्षार्थी के हस्ताक्षर : ____________________ निरीक्षक के हस्ताक्षर : ____________________
Candidate's Signature : Invigilator's Signature :
Facsimile Signature Stamp of
Centre Superintendent : ____________________

Language Code : **17**

# SED-24-II

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**D**

**இந்த நூற்கட்டு 20 பக்கங்கள் கொண்டது** **தாள்–II**

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

**பகுதி IV & V**

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.**

**இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

**தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டுக் குறிப்புகள் :**

**1.** இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி–I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) தமிழ் மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**

**2.** தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I, II, III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.

**3.** ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.

**4.** இப்பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம்/ கருப்பு மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**

**5.** இந்நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **D** ஆகும். இந்நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2–லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றேதானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.

**6.** இந்த தேர்வு நூற்கட்டு **2** பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே **IV & V** என்றவாறாக அமையும்.
பகுதி-IV : மொழி-I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
பகுதி-V : மொழி-II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)

**7.** பகுதி-IV இல் மொழி-I க்கும், பகுதி-V இல் மொழி-II க்கும் தலா 30 வினாக்கள். இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.

**8.** தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி-**I** (பகுதி **IV** இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி-**II** (பகுதி-**V** க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.

**9.** இத்தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.

**10.** ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) ______________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ______________________

: எழுத்தில் ______________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ______________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் : ______________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : ______________________

Facsimile signature stamp of Centre Superintendent : ______________________

தேர்வு எழுதுவோர் **தமிழைத்**, தமிழ்–**I** மொழியாக தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி–IV (கே.எண் : 91 - 120)** -க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part-IV (Q.No. 91-120)**, if they have opted **TAMIL** as **Language-I** only.

→

## PART–IV

## LANGUAGE–I

## TAMIL

| |
|---|
| **பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE-I) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே-IV (கே.எண்: 91-120) க்கான விடைகளைத் தரவேண்டும்.** |

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும் (கே.எண். 91 - 99)**

பழைய சாசன எழுத்துக்களின் ஆராய்ச்சியும், பழம் பொருள்களின் ஆராய்ச்சியும் அண்மைக் காலத்திலே மேல் நாடுகளில் புத்தம் புதிதாக ஏற்பட்ட சாத்திரக் கலைகளாகும். இவை பழைய எழுத்துச் சாசனங்களை ஆராய்வதும், பழைய கலை நாகரிகம் முதலியவைகளை ஆராய்வதும் ஆகும். இவ்வாராய்ச்சிகளினாலே பன்னூற்றாண்டுகளுக்கு முன்னமே மறைந்துபோன பல செய்தி களை அறியலாம். நமது நாட்டை அரசாண்ட ஆங்கிலேயர் இந்த ஆராய்ச்சிக் கலைகளை நமது நாட்டிலே சென்ற 19 -ஆம் நூற்றாண்டிலே அமைத்தார்கள். இந்தக் கலைத் துறைகளை ஆராயும் இலாகா ஏற்பட்ட பிறகு, நமது இந்திய நாட்டிலே பல நூற்றாண்டுகளாக மறைந்து கிடந்த பல சரித்திர உண்மைகள் புத்தம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த இலாகாவினால் தமிழ் நாட்டுக்குப் பெரும் பயன் ஏற்பட்டிருக்கிறது. இந்த இலாகாவினால் ஏற்படும் நன்மைகளைப் பொது ஜனங்கள் இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை. இவ்வாறு ஓர் இலாகா இருக்கிறது என்பதையே பலர் அறியாமலிருக்கின்றனர். மறைந்துபோன பழைய தமிழரின் கலை, நாகரிகம், சரித்திரம், பண்பாடு முதலியவற்றை அறிந்து கொள்ள இந்த ஆராய்ச்சித் துறை பேருதவியாக இருப்பதுடன் தமிழ் இலக்கியம் சம்பந்தமாகவும் பல செய்திகளைத் தெரிந்து கொள்ளப் பேருதவி யாக இருக்கின்றது.

ஆங்கிலேயக் கிழக்கு இந்தியக் கம்பெனியார் இந்திய தேசத்துக்கு வந்து வாணிகம் செய்து கொண்டே சிறிது சிறிதாக நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்யத் தலைப்பட்டனர். ஆங்கில அரசாங்க ஊழியர்களாக இங்கிலாந்து தேசத்திலிருந்து பலர் இங்கு வந்தார்கள். அவர்களில் சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவரும் ஒருவர். இவர் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதியாக நியமனம் பெற்றுக் கி.பி. 1783 -ஆம் ஆண்டு கல்கத்தாவுக்கு வந்தார்.

இவர் வந்து அலுவல் செய்யத் தொடங்கியபின், கிழக்கிந்திய நாடுகளின் கலைகளையும், இலக்கியங்களையும் ஆராய்ந்தறிய ஒரு நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கருதினார். அதன்படியே 1784 -ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கல்கத்தா நகரத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டு ஆசிய சங்கம் என்னும் பெயருடைய ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சங்கத்தின் ஆதரவில் *''ஆசிய நாட்டு ஆராய்ச்சிகள்''* என்னும் திங்கள் இதழ் ஆங்கிலத்தில் வெளியாயிற்று. பழைய கட்டடங்கள், பழைய சிற்பக்கலைகள், பழைய சாசனங்கள், பழைய நாணயங்கள், இந்திய மொழிகளின் இலக்கியங்கள் முதலியவற்றின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்தத் திங்கள் இதழில் எழுதப்பட்டன.

**91.** _________ என்னும் பெயருடைய ஒரு சங்கம் _________ நடந்த கூட்டம் ஒன்றில் _________.

(1) ஆசிய சங்கம், கல்கத்தா நகரில், வெளியிடப்பட்டது

(2) ஆசிய நாட்டு ஆராய்ச்சிகள், கல்கத்தா நகரில், ஏற்படுத்தப்பட்டது

(3) ஆசிய சங்கம், கல்கத்தா நகரில், ஏற்படுத்தப்பட்டது

(4) ஆசிய சங்கம், இங்கிலாந்து தேசத்தில், ஏற்படுத்தப்பட்டது

92. __________ முன்னர் மறைந்து போன __________ அறிய சாசன, பழம் பொருள் __________ உதவுகிறது.

(1) சில நூற்றாண்டுகளுக்கு, கட்டடங்களை, ஆராய்ச்சிக் கலை
(2) பன்னூற்றாண்டுகளுக்கு, நகரங்களை, ஆராய்ச்சிக் கலை
(3) பன்னூற்றாண்டுகளுக்கு, பல செய்திகளை ஆராய்ச்சிக் கலை
(4) ஆராய்ச்சிகளுக்கு, பல செய்திகளை, ஆராய்ச்சி இலாகா

93. பழைய எழுத்துச் சாசனங்கள், கலை, நாகரிகம் முதலியவற்றை ஆராயும் கலையால் தமிழருக்கு அறியக் கிடைத்தவை :

(1) பழந்தமிழர் கலை, நாகரிகம், சரித்திரம், பண்பாடு
(2) பழந்தமிழர் சாசனம், கல்வெட்டு, இலக்கியம், சரித்திர உண்மைகள்
(3) கலை, பண்பாடு, நாணயம், சிற்பம், மொழிகள்
(4) சரித்திர உண்மைகள், மறைந்துபோன சாசனங்கள்

94. ஆசிய நாட்டு ஆராய்ச்சிகள் என்னும் திங்கள் இதழ் பழமையான __________, __________, __________, __________ பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டது.

(1) தமிழர் கலை, நாகரிகம், எழுத்துச் சாசனங்கள், இந்திய மொழிகள்
(2) கட்டடங்கள், சிற்பக் கலைகள், சாசனங்கள், நாணயங்கள்
(3) சரித்திரங்கள், பண்பாடுகள், நாணயங்கள், சாசனங்கள்
(4) கட்டடங்கள், நாகரிகம், இலக்கியம், எழுத்துகள்

95. சுப்ரீம் கோர்ட்டு நீதிபதியாக __________ கல்கத்தாவுக்கு வந்தார், கிழக்கிந்திய நாடுகளின் __________ இலக்கியங்களையும் ஆராய்ந்தறிய __________ ஏற்படுத்தக் கருதினார்.

(1) சர் வில்லியம் ஜோன்ஸ், கலைகளையும், ஓர் ஆட்சி முறையை
(2) சர் வில்லியம் ஜோன்ஸ், கலைகளையும், ஒரு நிலையத்தை
(3) கிழக்கிந்தியக் கம்பெனியார், கலைகளையும், ஒரு நிலையத்தை
(4) சர் வில்லியம் ஜோன்ஸ், ஆட்சிகளையும், ஒரு நிலையத்தை

96. __________ மறைந்து கிடந்த __________ உண்மைகள் __________ கண்டுபிடிக்கப்பட்டன.

(1) பழம் பொருள்களில், சரித்திர, புத்தம் புதிதாகக்
(2) தமிழ்நாட்டில், பல சரித்திர, மீண்டும்
(3) பல நூற்றாண்டுகளாக, சாசன எழுத்தின், புதிதாகக்
(4) பல நூற்றாண்டுகளாக, பல சரித்திர, புத்தம் புதிதாகக்

97. __________ செய்து கொண்டே __________ ஆட்சி செய்யத் தலைப்பட்ட கிழக்கு இந்திய கம்பெனியின் __________ இங்கிலாந்து தேசத்திலிருந்து இங்கு வந்தார்கள்.

(1) வாணிகம், நாட்டைக் கைப்பற்றி, ஆட்சியாளர்கள் சிலர்
(2) வாணிகம், நாட்டுக்கு வெளியே, ஊழியர்கள்
(3) ஆராய்ச்சிகள், நாட்டின் மீது, ஊழியர்கள்
(4) வாணிகம், நாட்டைக் கைப்பற்றி, ஊழியர்கள் பலர்

98. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் அமைத்தது :

(1) சரித்திர உண்மைகளை புத்தம் புதிதாகக் கண்டறியும் இலாகா
(2) பழம் பொருள் ஆராய்ச்சிக் கூடம்
(3) பழைய சாசனம் மற்றும் பழம் பொருள்கள் ஆராய்வதற்கான இலாகா
(4) பழைய சாசனங்களை பொது ஜனங்களுக்குக் கற்பிக்கும் இலாகா

99. மேல் நாடுகளில் புத்தம் புதிதாக ஏற்பட்ட சாத்திரக் கலைகள் :
(1) மறைந்துபோன செய்திகளைக் கண்டறிந்து சாசனங்களாக்கும் கலைகள்
(2) சாசன எழுத்துக்களின் பழமையையும், பழம் கலைப்பொருள்களின் தன்மையையும் ஆராயும் கலைகள்
(3) பழமையான சாசனங்களை உருவாக்கி ஆராய்ச்சிக்கு உட்படுத்தும் கலைகள்
(4) பழைய சாசன எழுத்துகள் மற்றும் பழம் பொருள்கள் பற்றிய ஆராய்ச்சிக் கலைகள்

**பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும் (கே.எண். 100 - 105)**

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன் !
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன் ! அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்,
தொட்ட இடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள் !
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ! ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில்அந்த 'அழகெ'ன்பாள் கவிதை தந்தாள்.

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்;
திருவிளக்கில் சிரிக்கின்றாள்; நாரெ டுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்; அடடே செந்தோள்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புது நடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தினாள்; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்.

100. __________ கலப்பையுடன் செல்லும் __________ புது நடையில் அழகின் __________.
(1) விளைந்த, உழவனின், பூரிப்பு
(2) புறத்தில், உழவனின், பூரிப்பு
(3) தோளில், உழவனின், குடியேற்றம்
(4) தோளில், உழவனின், பூரிப்பு

101. எழும் கதிரவன் __________, கடற்பரப்பில் தோன்றுவது __________.
(1) ஒளிப்புனல், மாணிக்கச் சுடர்
(2) சுடர் ஒளி, இளம்பரிதி
(3) இளம்பரிதி, ஒளிப்புனல்
(4) இளம்பரிதி, மாணிக்கச் சுடர்

102. __________ நிறத்தில் __________ நிறுத்தியவள் __________ குடியேறி __________ செய்கிறாள்.
(1) நன்செய், அழகை, விழியில், மகிழ்ச்சி
(2) நன்செய், விழியை, நெஞ்சத்தில், மகிழ்ச்சி
(3) விளைந்த, விழியை, நெஞ்சத்தில், மகிழ்ச்சி
(4) நன்செய், நெஞ்சத்தை, விழியில், மகிழ்ச்சி

103. அழகின் நாடகம் __________ தொடுப்பவனின் __________ நடக்கிறது.
(1) விரல்களால் நாரைத், வளைவில்
(2) மலரை நாரெடுத்துத், புது நடையில்
(3) நறுமலரை நாரெடுத்துத், விரல் வளைவில்
(4) நறுமலரைத், விரல்களில்

**104.** தொட்ட இடம் இவை எனவும், கண்ணில் அழகு தட்டுப்படும் இடம் எனவும் சொல்லப் படுவன :

(1) மலர்கள், தளிர்கள், மாணிக்கம் (2) சோலை, மலர்கள், தளிர்கள்

(3) சாலை, கிளை, கிளிக் கூட்டம் (4) சோலை, திருவிளக்கு, மாலை

**105.** ஒளியாய் __________ நிற்கிறாள், __________ சிரிக்கிறாள்.

(1) திருவிளக்கில், குழந்தையின் விழியில்

(2) விரல் வளைவில், திருவிளக்கில்

(3) சிறு குழந்தையின் விழியில், நன்செய் நிறத்தில்

(4) சிறு குழந்தையின் விழியில், திருவிளக்கில்

**106.** துல்லியமான பாடநூல் என்பது :

(1) குழந்தைகள் வீட்டிலிருந்து எடுத்துவரும் நூல்

(2) ஆசிரியர்களால் தன் மாணவர்களுக்காக எழுதப்பட்ட நூல்

(3) வல்லுநர்களால் எழுதப்பட்ட நூல்

(4) எதார்த்த வாழ்வின் பொருளைக் கொண்டு எழுதிய நூல்

**107.** அபர்ணா என்ற ஐந்தாம் வகுப்பு மாணவி, கேட்டல் என்பது ஒவ்வொரு ஒலி, வார்த்தைகள் பிறகு வாக்கியங்கள் பேச்சின் பொருளைப் பெறுகிறது என்று புரிந்து கொள்கிறாள். இதில் என்ன அணுகுமுறையை கற்றலில், கேட்டல் பற்றி நம்புகிறாள் ?

(1) மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் என இரண்டு அணுகுமுறையும் அல்ல

(2) மேலிருந்து கீழ் அணுகுமுறை

(3) கீழிருந்து மேல் அணுகுமுறை

(4) கீழிருந்து மேல், மேலிருந்து கீழ் என இரண்டு அணுகுமுறை

**108.** மொழிக் கற்றலில் முறையாகப் புரிந்து கொள்ளும் திறன் என்றால் என்ன ?

(1) எல்லா மொழிகளுக்குமான ஒரு அமைப்பை மனிதர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுதல்

(2) மொழிகள் முறையான அமைப்பைக் கொண்டுள்ளன என்பதைப் புரிந்து கொள்ளுதலும், பயன்படுத்துதலும்

(3) மொழிகள் ஒரு இலக்கண அமைப்பைக் கொண்டுள்ளன என்பதைப் புரிந்து கொள்ளுதலும், பயன்படுத்துதலும்

(4) எல்லா மொழிகளும் ஒரு பொதுவான முறை அமைப்பைக் கொண்டுள்ளன என்பதைப் புரிந்து கொள்ளுதல்

**109.** கீழ்க்கண்ட பத்தியைப் படித்து அது எந்த வகை மொழிப் பதிவைக் கொண்டது என்பதைக் கண்டுபிடி.

இந்திய அரசியல் அமைப்பின்படி அனைவரும் சமம். இது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும், ஆணும், பெண்ணும், எல்லா சாதியினரும், மதத்தினரும், பூர்வகுடிகளும், எந்த பொருளா தாரப் பின்புலத்தைக் கொண்டவராயிருப்பினும் அனைவரும் சமம் என்பதைக் குறிக்கிறது. இதற்கு சமநிலையின்மை இருக்கிறது என்பது பொருள் அல்ல. இல்லை என்றே பொருள். சுதந்திர இந்தியாவில் அனைவரும் சமம் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(1) அறிவியல் (2) அரசியல் (3) சமூக அறிவியல் (4) சட்டம்

**110.** ஒரு ஆறாம் வகுப்பு ஆசிரியர், ஆயத்தம் செய்து கொள்ள படிக்கப்போகும் பாடத்துடன் தங்களின் முன் அறிவையும், அனுபவங்களையும் தொடர்பு படுத்திக் கொள்ள கேட்கிறார். ஆனால், அவர் மாணவர்களுக்கு பாடம் நடத்த துவங்கும் முன்னர் பாடப்பொருளை விளக்கும் படத்தை கவனிக்கச் சொல்கிறார். மாணவர்களுக்கு அவர் என்ன செய்ய விழைகிறார் ?

(1) விளக்கப்படத்தைப் புரிந்து கொள்ளச் செய்தல்

(2) விளக்கப்படம் மூலம் கற்பனை செய்து கொள்ளல்

(3) விளக்கப்படத்தை பாராட்டுதல்

(4) படிக்கப்போகும் பாடம் குறித்து முன் அறிவு பெறச் செய்தல்

**111.** கற்றலில் தொடர் பதிவேடு என்பது :

(1) நிலையறி நுண்தேர்வு (2) செயல் தொகுப்பு

(3) தொடர் முழுமைக் கணக்கீடு (4) வல்லமை மதிப்புக் கணக்கீடு

**112.** கீழே கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் உள்வாங்கும் திறன் என்று அறியப்படுவது :

(1) கேட்டல் மற்றும் படித்தல் (2) கேட்டல் மற்றும் எழுதுதல்

(3) படித்தல் மற்றும் பேசுதல் (4) பேசுதல் மற்றும் எழுதுதல்

**113.** பல இந்தியர்கள் வேலைக்காக வெளிநாடு செல்லும்போது அங்குள்ள மொழியைக் கற்கின்றனர். இந்த தூண்டுதல் என்னவாக அறியப்படுகிறது ?

(1) இண்டராகேட்டிவ் தூண்டுதலும் அல்ல. இன்ஸ்ரூமெண்டல் தூண்டுதலும் அல்ல

(2) இண்டராக்டிவ் மற்றும் இன்ஸ்ரூமெண்டல் தூண்டுதல்

(3) இண்டராகேட்டிவ் தூண்டுதல்

(4) இன்ஸ்ரூமெண்டல் தூண்டுதல்

**114.** கீழே கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் எது செம்மொழி அல்ல ?

(1) இந்தி (2) தமிழ் (3) சமஸ்கிருதம் (4) தெலுங்கு

**115.** அயல் மொழிக் கற்றல் குறித்து தேசியக் கல்விக் கொள்கை 2020 கூறுவதில் கீழ்க்கண்ட எது ஒன்று தவறானது ?

(1) பிரெஞ்ச் மொழி கற்றல் என்பது கூடுதல் விருப்பமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(2) அயல் மொழிகளைக் கற்றல் என்பது மேனிலைக் கல்வியில் மாணவர்களின் கூடுதல் விருப்பம்

(3) அயல் மொழிகளைக் கற்றல் என்பது மும்மொழிக் கொள்கையின் கீழ் உள்ளடங்குகிறது.

(4) அயல் மொழிகளைக் கற்றல் என்பது மும்மொழிக் கொள்கையின் கீழ் உள்ளடங்கியது அல்ல.

**116.** மொழி பற்றி அறிதல் என்பது :

(1) செயல் திட்ட அறிவு (2) எடுத்துரைத்தல் அறிவு

(3) நடைமுறை அறிவு (4) இலக்கண அறிவு

**117.** ஆறாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் பேசுதல் பயிற்சிக்காக கீழ்க்கண்டவாறு ஒரு இடுபணி தயார் செய்கிறார்.

'பாலைவனத்தைப் பற்றியும், அதன் காலநிலை குறித்தும் ஐந்து வாக்கியங்கள் பேசுக'.

இது ஒரு நல்ல இடுபணியா (task) அல்லவா என்பதை கீழ்க்கண்டனவற்றிலிருந்து உனது பதில் மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் தேர்ந்தெடு.

(1) இது ஒரு நல்ல இடுபணி அல்ல. ஏனென்றால் பாலைவனத்தைப் பற்றியும், அதன் கால நிலைகளைப் பற்றியும் பேச தரவும், சூழ்நிலையும் இங்கு இல்லை.

(2) இது ஒரு நல்ல இடுபணி. ஏனென்றால் மாணவர்கள் தங்களது புவியியல் பாட வகுப்பில் பாலைவனத்தைப் பற்றி படித்திருக்கக் கூடும், அதிலிருந்து குறிப்புகளைக் கொண்டு பேசவும் முடியும்.

(3) இது ஒரு நல்ல இடுபணி. ஏனென்றால் பாலைவனத்தைப் பற்றி மாணவர்கள் ஏதேனும் இங்கு பேச முடியும்.

(4) இது ஒரு நல்ல இடுபணி அல்ல. ஏனென்றால் சில மாணவர்கள் பாலைவனத்தைப் பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை.

**118.** ஒரு மொழியின் வட்டார வழக்கு குறித்த கீழ்க்கண்ட கூற்றுகளுள் எது சரியானது ?

(1) சில நேரங்களில் ஒரு மொழியின் பல வட்டார வழக்குகளைப் பல சமூகக் குழுக்கள் பேசுவர்.

(2) மொழியின் வட்டார வழக்கு இடத்திற்கு இடம் வேறுபடும்.

(3) ஒரு மொழியின் பல வட்டார வழக்குகளைப் பேசுகின்ற மக்களுள் அடுத்தவர் பேசுகின்ற வட்டார வழக்கைப் புரிந்து கொள்வர்.

(4) வட்டார வழக்கு என்பது பெரிய தொகுதி, மொழி என்பது சிறிய தொகுதி.

**119.** கீழ்க்கண்டனவற்றுள் எந்த இடுபணி ஒருங்கிணைந்த கற்றலை ஊக்கப்படுத்துகிறது ?

(1) கட்டுரை எழுதுதல் (2) பங்கேற்பு

(3) ஒப்படைப்பு (4) செயல் திட்டப் பணி

**120.** கீழே கொடுக்கப்பட்டுள்ள எந்த கற்பித்தல் முறை பயன்பாட்டு இலக்கணம் கற்பித்தல் என்று அறியப்படுகிறது ?

மொழியின் கூறுகளைப் பயன்பாட்டு நோக்கில் அறிமுகப்படுத்துதல், அதை மாணவர்களைக் கவனிக்கச் செய்தல், அன்றாட இயல்பு வாழ்க்கைச் சூழலில் பயன்படுத்தி தானே கண்டறிந்து கற்பதற்குத் தூண்டுதல்.

(1) கான்சியஸ் ரெய்சிங் (2) கிரியேட்டிவ் ஸ்கீமா

(3) டிடக்டிவ் முறை (4) டிஸ்கவரி முறை

தேர்வு எழுதுவோர் **தமிழைத்,** தமிழ்-**II** மொழியாக தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி-V (கே.எண் : 121 - 150)** -க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part-V (Q.No. 121-150)**, if they have opted **<u>TAMIL</u>** as **Language-II** only.

## PART-V

## LANGUAGE-II

## TAMIL

**பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE-II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே-V (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும் (கே.எண். 121 - 128)**

அச்சியந்திரங்கள் ஏற்பட்ட பிறகுதான் எல்லா நாடுகளிலும் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. நமது நாட்டிலே அச்சியந்திரம் அதிகமாக ஏற்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வார இதழ், திங்கள் இதழ் முதலிய வெளியீடுகள் தோன்றின. பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னர் பத்திரிகைகள் தமிழில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. முதன் முதலாகத் தமிழில் வார இதழ், திங்கள் இதழ் முதலிய பத்திரிகைகளை வெளியிட்டவர்கள் கிருஸ்துவப் பாதிரிமார்களே. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் அச்சுக் கூடங்களை வைக்கும் உரிமை ஐரோப்பியப் பாதிரி மார்களுக்கும், அரசாங்கத்தாருக்கும் மட்டும் இருந்தது. மற்றச் சுதேசிகளுக்கு அந்த உரிமை இல்லாமலிருந்தது. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பியப் பாதிரிமார்கள் அச்சுக் கூடங்களை வைத்திருந்தபடியினாலும், ஐரோப்பிய நாடுகளில் வார, மாத இதழ்கள் வெளி வருவதைக் கண்டவர்களானபடியினாலும், அவர்கள் தமிழில் முதன் முதலாகத் தமிழ் இதழ்களை வெளியிட்டார்கள். அவர்கள் கிறிஸ்துவரானபடியினால் அவர்களின் வெளியீடுகள் எல்லாம் கிறிஸ்துமதச் சார்புடையனவாய் இருந்தன. சுதேசிகளுக்கும் அச்சுக்கூடம் வைக்கும் உரிமை ஏற்பட்ட பிறகு, இந்துக்களும், முஸ்லிம்களும் பத்திரிகைகளை வெளியிட்டார்கள். பொதுவாகப் பத்திரிகைகள் நெடுங்காலம் தொடர்ந்து நடைபெறுவது இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தோன்றிச் சில காலம் நடந்து பின்னர் மறைந்துபோன தமிழ்ப் பத்திரிகைகள் பல.

**121.** பத்திரிகைகள் வெளிவர __________ காரணமாக அமைந்தது, __________ அது நம் நாட்டில் அதிகமாக ஏற்பட்டது.

(1) அரசாங்கம், பத்தொன்பதாம் நூற்றாண்டில்

(2) திங்கள் இதழ்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டில்

(3) அச்சியந்திரங்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டில்

(4) அச்சியந்திரங்கள், சுதேசிகளால்

**122.** தொடக்க கால வெளியீடுகள் __________ சார்புடன் இருந்தது, அதற்கான அச்சுக் கூடங்கள் __________ பாதிரிமார்களிடம் இருந்தது.

(1) இந்துமதச், ஐரோப்பிய

(2) கிறிஸ்துமதச், ஐரோப்பிய

(3) ஆங்கிலச், ஐரோப்பிய

(4) கிறிஸ்துமதச், ஆங்கில நாட்டுப்

**123.** அச்சுக் கூடங்களை வைக்கும் உரிமை, சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் :

(1) அரசாங்கத்தாருக்கும், சுதேசிகளுக்கும் இருந்தது.

(2) கிருஸ்து மதச்சார்பாகவும், பிறநாட்டுச் சார்பாகவும் இருந்தது.

(3) ஐரோப்பிய பாதிரிமார்களுக்கு மட்டும் இருந்தது.

(4) ஐரோப்பிய பாதிரிமார்களுக்கும், அரசாங்கத்தாருக்கும் மட்டும் இருந்தது.

**124.** __________ அச்சுக் கூடம் வைக்கும் __________ ஏற்பட்ட பிறகு __________, __________ பத்திரிகைகள் வெளியிடத் தொடங்கினார்கள்.

(1) சுதேசிகளுக்கு, பயிற்சி, இந்துக்கள், தமிழில்

(2) ஐரோப்பியர்களுக்கு, உரிமை, இந்துக்கள், முஸ்லிம்கள்

(3) தமிழ்நாட்டில், உரிமை, இந்துக்கள், சுதேசிகள்

(4) சுதேசிகளுக்கு, உரிமை, இந்துக்கள், முஸ்லிம்கள்

**125.** பல தமிழ்ப் பத்திரிகைகள் __________ பின்னர் மறைந்து போயின, அவை __________ நடைபெறுவதில்லை.

(1) வெளியான, சில காலம்

(2) சில காலம் நடந்து, நெடுங்காலம் தொடர்ந்து

(3) சில காலம் நடந்து, காலந்தோறும்

(4) அச்சுக்கு வந்த, சில காலத்திற்குப் பிறகு

**126.** அச்சியந்திரங்கள் __________ ஐரோப்பியர் உரிமையாக இருந்து, பிறகு __________ அந்த உரிமை கிடைத்து __________ பத்திரிகைகள் வளர்ந்தது பற்றி இங்கு கூறப்படுகிறது.

(1) தொடக்கத்தில், அரசாங்கத்தாருக்கு, வார மாத

(2) தொடக்கத்தில், இந்தியர்களுக்கும், தமிழ்நாட்டில்

(3) தொடக்கத்தில், பாதிரியார்களுக்கு, தமிழ்நாட்டில்

(4) வெளிநாடுகளில், இந்தியர்களுக்கும், தமிழ்நாட்டில்

**127.** __________ தமிழில் __________ வெளியிட்டவர்கள் கிருஸ்துவப் பாதிரிமார்கள்.

(1) முதன் முதலாகத், வார இதழ்களும், திங்கள் இதழ்களும்

(2) முதன் முதலாகத், திங்கள் இதழ்

(3) முதன் முதலாகத், வெளியீடுகள்

(4) முதன் முதலாகத், அச்சியந்திரங்களை

**128.** ஐரோப்பிய நாடுகளில் __________, __________ இதழ்கள் வெளிவருவதைக் கண்ட __________ தமிழிலும் __________ வெளியிட்டார்கள்.

(1) வார, மாத, இந்துக்கள், அச்சு நூல்களை

(2) வார, மாத, பாதிரிமார்கள், இதழ்களை

(3) அச்சு, வெளியீட்டு, அரசாங்கத்தினர், இதழ்களை

(4) வார, மாத, சுதேசிகளும், பத்திரிகையினை

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும் (கே.எண். 129 - 135)**

நம் அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்த மாமேதை அம்பேத்கர் இந்தியச் சமூகத்தை நீதியின் வழி அமைந்த, சமத்துவம் உடைய சமூகமாக அமைப்பதற்கான அடிப்படைகளை உருவாக்கித் தந்துள்ளார். அதனை நம் தேசத்தின் மாபெரும் தலைவர்கள் புகழ்ந்து ஏற்றுக் கொண்டனர். அண்ணல் காந்தியின் கொள்கைகளும் இந்திய அரசியலுக்கு மாபெரும் பங்கை ஆற்றியுள்ளன. கிராம முன்னேற்றம், அனைவருக்குமான வாழ்வுரிமை, அனைவருக்குமான கல்வி என்பவை நம் நாட்டின் முக்கிய கொள்கைகளாக அமைந்துள்ளன.

பெண்களுக்கான சம உரிமையை உறுதி செய்துள்ள நமது அரசியல் அமைப்புச் சட்டம் காலங்காலமாக இருந்து வந்த பெண்ணடிமைத்தனத்தை சட்டவகையில் தடை செய்துள்ளது. பலவகையான சமத்துவம், பலவகையான உரிமைகளை அளித்துள்ள நம் இந்திய அரசியல் ஒவ்வொருவருக்குமான கடமைகளையும் வரையறுத்துள்ளது. இவற்றைப் புரிந்துகொண்டு, சமூக நீதியை மதித்து நடப்பது நம் அனைவரின் கடமையாகும். ஒவ்வொருவருக்குமான மனித உரிமைகளை மதிப்பதும், சுயமரியாதையுடன் அனைவரையும் நடத்துவதும் நவீன இந்தியச் சமூகத்தின் அடிப்படைக் கொள்கையாக அமைந்துள்ளது. இதனைப் புரிந்துகொள்ளும்போது மொழி, பண்பாடு, மதம் என்பவற்றால் நாம் வேறுபட்டு இருந்தாலும் இந்தியர் என்ற வகையில் இணைந்தவர்களாகிறோம். இதனை அனைவருக்கும் புரியவைப்பதுதான் இந்தியக் கல்வி முறையின் அடிப்படைத் தேவையாக உள்ளது.

**129.** வேறுபாடுகள் __________, __________, __________ இவற்றில் உள்ளது, கல்வி முறையின் மூலம் இதனைக் கடந்த __________ ஏற்பட்டு __________ புரிதல் ஏற்படுகிறது.

(1) மொழி, பண்பாடு, மதம், உரிமை, இந்தியர் என்ற

(2) சட்டம், உரிமை, கடமை, இணைப்பு, இந்தியர் என்ற

(3) மொழி, பண்பாடு, மதம், இணைப்பு, இந்தியர் என்ற

(4) சமத்துவம், சமூகம், நீதி, இணைப்பு, இந்தியர் என்ற

**130.** இந்திய அரசியல் அனைவருக்குமான __________ பல வகை__________ அளித்துள்ளது, அத்துடன் _________ வரையறுத்துள்ளது.

(1) மொழி, பண்பாடுகளை, கடமைகளை

(2) சமத்துவம், உரிமைகளை, கடமைகளை

(3) கடமைகள், உரிமைகளை, சமத்துவத்தை

(4) சட்டம், சமூக நீதிகளை, மொழிகளை

**131.** இந்திய அரசியலுக்கு __________ கொள்கைகளும் பங்காற்றியுள்ளன, அதன் முக்கிய பகுதிகள் __________, __________, __________.

(1) அம்பேத்கரின், பெண்ணுரிமை, சட்டம், கடமைகள்

(2) மாபெரும் தலைவர்களின், முன்னேற்றம், வாழ்வுரிமை, கல்வி

(3) அண்ணல் காந்தியின், கிராம முன்னேற்றம், அனைவருக்குமான வாழ்வுரிமை, அனைவருக்குமான கல்வி

(4) அண்ணல் காந்தியின், முன்னேற்றம், வாழ்வுரிமை, கல்வி

**132.** நவீன இந்தியச் சமூகத்தின் அடிப்படைக் கொள்கை :

(1) சுயமரியாதையை அனைவருக்கும் உறுதி செய்வது

(2) மனித உரிமைகளை மதிப்பது, சுயமரியாதையுடன் அனைவரையும் நடத்துவது

(3) மொழி, பண்பாடு, மதம் இவற்றால் இணைவது

(4) மனித உரிமைகளைக் கோருவது

**133.** __________ இருந்து வந்த __________ சட்டவகையில் தடை செய்யப்பட்டுள்ளது.

(1) சமூக நீதியில், பெண்ணடிமைத்தனம்

(2) பழங்காலத்தில், பெண்ணடிமைத்தனம்

(3) அரசியலில், பெண்ணடிமைத்தனம்

(4) காலம் காலமாக, பெண்ணடிமைத்தனம்

**134.** மாமேதை அம்பேத்கர் அமைத்த அரசமைப்புச் சட்ட அடிப்படைக் கருத்து :

(1) கிராம முன்னேற்றம், அனைவருக்குமான கல்வி

(2) நீதிவழி அமைந்த சமத்துவம் உடைய இந்தியச் சமூகம்

(3) நீதியும், அமைதியும் கொண்ட இந்தியச் சமூகம்

(4) சமத்துவம் உடைய இந்தியச் சமூகம்

**135.** __________ மதித்து நடப்பது __________ கடமை, இது இந்திய அரசியலின் வரையறைக்குள் இருப்பதை புரிந்து கொள்ளும்போது நிகழ்வது.

(1) பண்பாடுகளை, இந்தியர்களின்

(2) இந்தியர்களை, அரசியலின்

(3) சமூக நீதியை, இந்தியர் அனைவரின்

(4) சமூக நீதியை, மொழிகளின்

**136.** அஸ்வினுக்கு ஒடியா மொழி பிறந்ததிலிருந்தே தெரியும். மேலும் ஆங்கிலமும், இந்தியும் படிக்கிறார்கள். இக்கூற்றின்படி கீழ்கண்ட எது ஒன்று தவறானது ?

(1) ஆங்கிலம் படித்தல் என்பது மொழி கற்றல்

(2) ஒடியா படித்தல் என்பது மொழி கற்றல்

(3) இந்தி படித்தல் என்பது மொழி படித்தல்

(4) ஆங்கிலம் படித்தல் என்பது மொழி படித்தல்

**137.** இன்ரூமெண்டல் ஊக்கம் நிகழ்வது :

(1) புத்தகம் எழுதுவதற்காக மொழிக் கற்றல்

(2) ஒருவர் வேலை நிமித்தம் பயன்பாட்டிற்காக மொழியைக் கற்றல்

(3) தாய்மொழி பேசுவோரிடம் மிகவும் நெருங்கி இருப்பதால் மொழிக் கற்றல்

(4) ஒருவர் தான் சார்ந்த குழுவின் மத, சமூக நிகழ்வுகளுக்காக மொழிக் கற்றல்

**138.** கிருபா மற்றும் கிரன் என்னும் இரட்டையர் மணிப்புரி மொழியின் ஒரு வட்டார வழக்கைப் பேசுகின்றனர், எனினும் அவர்கள் பேச்சில் மாறுபடுகின்றனர். அவர்களின் வட்டார வழக்குப் பேச்சு எவ்வாறு அறியப்படுகிறது ?

(1) மணிப்புரி (2) தனிநபர் பேச்சு வழக்கு

(3) வட்டார வழக்கு (4) பேச்சு நிலை

**139.** இந்திய அரசியலமைப்பில் ஆங்கில மொழிக்கு என்ன தகுதி கொடுக்கப்பட்டுள்ளது ?

(1) சட்ட மொழி (2) அலுவல் மொழி

(3) இணை அலுவல் மொழி (4) அயல் மொழி

**140.** தனி ஒரு மாணவனின் ஒரு குறிப்பிட்ட பாடப் பகுதியின் பலத்தையும், பலவீனத்தையும் கண்டறியும் பொருட்டு நடத்தப்படும் தேர்வு!

(1) வளர்நிலைத் தேர்வு (2) புறவயத் தேர்வு

(3) ஏற்புமைத் தேர்வு (4) நிலையறி தேர்வு

**141.** ஆதித்திக்கு இறந்த கால வினையெச்சத் தொடரின் விதி குறித்து தெரியும். ஆனால் நடைமுறையில் அவளால் பயன்படுத்த முடியாது. இது எந்த வகையான அறிவு முறையினைச் சார்ந்தது ?

(1) பயன்பாட்டு அறிவு

(2) மொழி கையகப்படுத்தும் சாதனம் (LAD)

(3) செயல்முறை அறிவு

(4) அறிவிப்பு அறிவு

**142.** கீழ்கண்டனவற்றுள் மொழி குறித்த தவறான கூற்று எது ?

(1) சில மொழிகள் மட்டுமே அறிவியல் மற்றும் பொறியியல் கருத்துக்களை சிறப்பாக வெளிப்படுத்த முடியும்

(2) மொழி ஒருவரின் அடையாளத்தை வெளிப்படுத்துகிறது

(3) மொழி ஒரு வரலாற்றுப் பெட்டகம்

(4) மொழி மனித அறிவு வளர்ச்சியில் பங்கு வகிக்கிறது

**143.** மொழிப்பாட வகுப்பறையில் ஒரு திட்டப்பணியை வடிவமைத்து செயல்படுத்துவதில் என்னென்ன படிநிலைகள் உள்ளன ?

(1) ஆசிரியரும், மாணவர்களும் அவர்களின் விருப்பப்படி ஆய்வுத்திட்டம் தயாரித்தல்.

(2) குழு அமைத்தல், திட்டமிடல், தரவு சேகரித்தல், தரவு விளக்கம், வரைவு எழுதுதல், தலைப்பைக் கண்டறிதல், அறிக்கை இறுதி செய்தல்.

(3) குழு அமைத்தல், தலைப்பைக் கண்டறிதல், திட்டமிடல், தரவு சேகரித்தல், தரவு விளக்கம், வரைவு திட்டம் எழுதுதல் மற்றும் அறிக்கை இறுதி செய்தல்.

(4) குழு அமைத்தல், தலைப்பைத் தேர்ந்தெடுத்தல், திட்டமிடல், தரவு சேகரித்தல், வரைவு எழுதுதல், தரவு விளக்கம், அறிக்கை தயார் செய்தல்.

**144.** கேட்டலில், மேலிருந்து - கீழ் அணுகுமுறை என்பது :

(1) ஒலி, வார்த்தை, தொடர், வாக்கியம் என அனைத்தையும் கேட்டல்

(2) குறிப்பிட்ட ஒன்றின் மீது கவனத்தைச் செலுத்துதல்

(3) பேச்சு அல்லது பாடக் கருத்தின் சாராம்சத்தைக் கேட்டல்

(4) பேச்சு மற்றும் பாடத்தின் எல்லாக் கருத்துகளையும் கேட்டல்

**145.** ஏழாம் வகுப்பு ஆசிரியர் ஒரு நபரைப் பற்றி எழுதுதல் இடுபணி கொடுக்க விரும்புகிறார். வகுப்பறைக்கு சென்று ஒரு வியாபாரியை அவரின் கூடையுடன் கூட்டி வருகிறார். ஆசிரியர் அவரை சுமார் ஏழு நிமிடம் அங்கு இருக்கக் கூறுகிறார். மேலும் மாணவர்களை அந்த நபரைப் பற்றி விவரித்து எழுதக் கூறுகிறார். இந்த செயல்பாட்டில் வியாபாரி பற்றி நீ அறிவது என்ன ?

(1) கற்பித்தல் பொருள்

(2) கற்பித்தலில் உதவியாளர்

(3) வியாபாரி

(4) ஒரு பங்கேற்பாளரின் செயல்பாடு

**146.** ஆறாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர், தன் மாணவர்கள் பாடநூலில் உள்ள சமூகம், அதிகாரம், அடையாளம் ஆகியனவற்றைப் பற்றி சுருக்கமாக புரிந்து படிக்க வேண்டுமென விரும்பு கிறார். கற்போரிடத்தில் அந்த ஆசிரியர் எதை வலியுறுத்துகிறார் ?

(1) இலக்கியத் திறன் (2) மொழி அறிவு

(3) விமர்சன அறிவு (4) பகுத்தாய்ந்து படித்தல்

**147.** செம்மொழி கற்றல் குறித்து தேசியக் கல்விக் கொள்கை (2020) கூறும் கீழ்கண்ட கூற்றுகளுள் எது சரியானது ?

(1) முக்கிய மொழியாக மேல் நிலையில் செம்மொழி கற்றல்

(2) செம்மொழி கற்றல் மேல் நிலைக் கல்வியில் கூடுதல் விருப்பம்

(3) செம்மொழி கற்றல் என்பது மும்மொழிக் கொள்கையில் உள்ளடங்குகிறது

(4) முன்பருவ நிலையில் செம்மொழி கற்றல்

**148.** கீழ்க்கண்ட பத்தியைப் படித்து அது எந்த வகையான மொழிப்பதிவை கொண்டது என்பதைக் கண்டறிக.

உலகத்தின் பல பகுதிகளில், ஆசியா, ஐரோப்பா உட்பட பல நாடுகளில் தனிமனித உரிமை மற்றும் சமூகத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் குறித்து விவாதிக்கப்பட்டது. புரட்சிக்குப் பின், திடீரென இது சாத்தியமானது. இந்தியாவில் ராஜாராம் மோகன் ராயும், டிரோஜியோவும் பிரஞ்சுப் புரட்சியின் முக்கியத்துவத்தைப் பற்றிப்பேசினர். காலனியத்தின் வளர்ச்சி சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது.

(1) புரட்சி (2) அறிவியல்

(3) அரசியல் (4) சமூக அறிவியல்

**149.** 'மொழித்தேர்வு பொதுவாக உள்வாங்கும் திறனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை' என்று எட்டாம் வகுப்பு ஆசிரியர் சுபாஷ் கூறுகின்றார். அவர் 'உள்வாங்கும் திறன்' என்று எதைக் குறிப்பிடுகிறார் ?

(1) பேசுதல் மற்றும் எழுதுதல் (2) கேட்டல் மற்றும் எழுதுதல்

(3) பேசுதல் மற்றும் படித்தல் (4) கேட்டல் மற்றும் படித்தல்

**150.** மொழி ஒரு அமைப்புடன் இயங்குகிறது என்பதை கற்போர் புரிந்து கொள்வதும், பயன் படுத்துவதும் :

(1) மூலோபாய திறன் (2) தொடர்பு திறன்

(3) முறை திறன் (4) சமூக மொழியியல் திறன்

**- o 0 o -**

SPACE FOR ROUGH WORK

**: கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :**

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் **பக்கம் 2**-ல் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் **நீலம்/கருப்பு பந்துருள்முனைப் பேனா**வினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும். குறியீடு செய்யப்பட்ட விடையை மாற்ற இயலாது.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத்தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச்சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர். விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப்பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்.
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டு வரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவது உட்பட பிற நடவடிக்கை களுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வு இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும். **மேலும், தேர்வர்கள் தங்களது இடது பெருவிரல் அடையாளத்தை வருகைப் பதிவுத் தாளில், ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பதிவு செய்யவேண்டும்.**
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்து விதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள் படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச்சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடாது.
15. **தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத்தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.**

## निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **नीले/काले बॉल पॉइन्ट पेन** से भरें। एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस OMR उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ। परीक्षार्थी अपना अनुक्रमांक OMR उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें।
4. परीक्षा पुस्तिका एवं OMR उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं OMR उत्तर पत्र के कोड या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी।
5. परीक्षा पुस्तिका/OMR उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका कोड व संख्या को परीक्षार्थी सही तरीके से उपस्थिति-पत्र में लिखें।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी। इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्विच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए। इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और परीक्षार्थी विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें।
11. कार्यरत निरीक्षक को अपना OMR उत्तर पत्र दिए बिना एवं उपस्थिति-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे। यदि किसी परीक्षार्थी ने दूसरी बार उपस्थिति-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने OMR उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा। **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान उपस्थिति-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ।**
12. इलेक्ट्रॉनिक/हस्तचालित परिकलक का उपयोग वर्जित है।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी परीक्षण संस्था के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं। अनुचित साधनों के सभी मामलों का फैसला परीक्षण संस्था के नियमों एवं विनियमों के अनुसार होगा।
14. किसी भी परिस्थिति में परीक्षा पुस्तिका और OMR उत्तर पत्र का कोई भाग अलग न करें।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल/कक्ष छोड़ने से पूर्व OMR उत्तर पत्र निरीक्षक को अवश्य सौंप दें।** ***परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं।***

## READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY :

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Blue / Black Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the OMR Answer Sheet is not folded. Do not make any stray marks on the OMR Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the OMR Answer Sheet.
4. Handle the Test Booklet and OMR Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and OMR Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet/OMR Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against the candidate including cancellation of examination.
9. Each candidate must show on demand his/her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his/her seat.
11. The candidates should not leave the Examination Hall/Room without handing over their OMR Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the OMR Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic/Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Examining Body with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Examining Body.
14. No part of the Test Booklet and OMR Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the OMR Answer Sheet to the Invigilator in the Hall / Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***